12.07.2017

தினமணி

**நிகழாண்டில் 1,000 விவசாயிகளுக்கு சூரிய சக்தி பம்ப்செட்கள்**



நிகழாண்டில் ஆயிரம் விவசாயிகளுக்கு சூரிய சக்தி பம்ப் செட்கள் 90 சதவீத மானியத்தில் வழங்கப்படும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

சட்டப் பேரவையில் விதி 110- ன் கீழ் அவர் செவ்வாய்க்கிழமை படித்தளித்த அறிக்கை: தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க நிகழாண்டில் 22 மாவட்டங்களில் தக்காளி, கத்திரி, வெண்டை போன்ற காய்கறிப் பயிர்களில் வீரிய ஒட்டு ரகங்கள், உயர் விளைச்சல் ரக சாகுபடி 11 ஆயிரத்து 250 ஏக்கரில் மேற்கொள்ளப்படும்.

இதற்காக, வீரிய ஒட்டு ரக விதைகள், குழித்தட்டுகளில் வளர்க்கப்பட்ட காய்கறி நாற்றுகள் 50 சதவீத மானியத்தில் ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் வரை அளிக்கப்படும்.

ஆயிரம் பம்ப் செட்கள்: தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 2 ஆயிரத்து 826 சூரியசக்தி பம்ப் செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் தேவை அதிகம் இருப்பதால், நிகழாண்டில் இந்த வகை மோட்டார் பம்ப் செட்கள் 1,000 விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்தில் வழங்கப்படும். கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் 10 ஆண்டுகால செயல்திட்டமாக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் நிறுவப்படும். நிகழாண்டில் இம்மையத்தின் தொடக்கப் பணிகள் ரூ.51 கோடியில்

மேற்கொள்ளப்படும்.


தோட்டக்கலை விளை பொருள்களைச் சேகரித்து, தரம் பிரித்து, பொட்டலம் கட்டி விநியோகத் தொடர் மேலாண்மையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். நிகழாண்டில் பண்ணை அளவில் 597 பொட்டலம் கட்டும் அறைகள் அமைக்கப்படும்.

தமிழகத்தில் கிராம அளவில் இயங்கி வரும் 550 துணை வேளாண் விரிவாக்க மையங்களில் பல கட்டடங்கள் பழுதடைந்துள்ளன. இதனைச் சரி செய்யும் வகையில், நிகழாண்டில் 160 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் புனரமைக்கப்படும்.

ரூ.108 கோடியில் புதிய வசதிகள்: கோவை, தூத்துக்குடியில் உள்ள கிள்ளிகுளம் வேளாண் கல்லூரிகள், பெரியகுளம் தோட்டக் கல்லூரி, மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி, வம்பன் பயறு ஆராய்ச்சி நிலையம், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம், உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் உள்ளிட்ட நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளும், விதை மையம் உள்ளிட்டவையும் ரூ.108 கோடியில் ஏற்படுத்தப்படும்.

நிகழாண்டில் 430 வேளாண் உதவி அலுவலர் பணியிடங்கள் டி.என்.பி.எஸ்.சி. மூலமாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**நூறு ஆண்டுகள் நிழல் தரும் ஆலமரம்**



காஞ்சிபுரம் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க உத்திரமேரூருக்கு அருகில் சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள அம்மையப்ப நல்லூரில் காணப்படும் ஆலமரத்தைக் கண்டால் ஆச்சரியப்படுவீர்கள். நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட கல்லால மரம் அவ்வூர் ஏரிக்கரையில் அமைந்துள்ளது. கல்லால மரத்தின் ஒவ்வொரு கிளைகளிலிருந்து தொங்கும் விழுதுகள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

பொதுவாக திருக்கோயில்களில் கல்லால மரத்தின்கீழ் தட்சிணாமூர்த்தி அமர்ந்திருப்பது போன்ற சிற்ப வடிவங்கள் காணப்படும். இவ்வூரில் பூரணை - புஷ்கலை சமேத அய்யனார் எழுந்தருளியுள்ளார். அவருடைய வாகனமான குதிரை சுதை உருவங்களும் உள்ளன. ஊர் மக்களின் சிறப்பு வழிபாட்டினை இக்கோயில் பெறுகிறது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தக்காளி கிலோ ரூ.100:இன்னும் கூடுமாம்**



ராமநாதபுரத்தில் தக்காளி கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 'இன்னும் விலை கூடும்' என வியாபாரிகள் தெரிவித்தனர். ராமநாதபுரம், ராமேஸ்வரம் பகுதிக்கு பெங்களூருவில் இருந்து 'ஹைபிரீடு' வகை தக்காளி விற்பனைக்கு வரும். தற்போது, தக்காளி வரத்து குறைந்துள்ளது. வறட்சி காரணமாக தமிழகத்திலும் தக்காளி விளைச்சல் குறைந்துள்ளது. தேனி மாவட்டம் கண்டமனுார் பகுதியில் அதிகளவு நாட்டுத்தக்காளி சாகுபடி நடக்கிறது. இங்கும் விளைச்சல் குறைவால் தக்காளி வரத்து குறைந்தது. நேற்று ராமநாதபுரத்தில் கிலோ 85 முதல் 90 ரூபாய் வரையிலும், சில்லரை கடைகளில் 100 ரூபாய் வரையும் விற்றது. இதுகுறித்து ராமநாதபுரம் கோயம்பேடு காய்கறி மார்க்கெட் உரிமையாளர் பாலா கூறுகையில், "விலை ஏற்றம் தொடரும். விளைச்சல் குறைவால் இன்னும் இரண்டு நாட்களில் 100 ரூபாய்க்கு மேல் விற்கப்படலாம்," என்றார்.சின்ன வெங்காயம் கிலோ 150 வரை விற்ற நிலையில் கடந்த இரண்டு நாட்களாக 80 ரூபாயாக குறைந்துள்ளது.

**நிழலுக்குள் உயரம்தேடும் மிளகாய் செடிகள்**



திறந்தவெளியில், இரண்டடி உயரத்தில் வளரும் புல்லட் ரக மிளகாய்ச் செடிகள், நிழல்வலை குடிலில் எட்டடி உயரம்தொட்டு அதிசயம் செய்கின்றன. திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரத்தில், உள்ள காய்கனி மகத்துவ மையத்தின் செயல் விளக்கத் திடலில் கொத்து கொத்தாக காய்த்துத் தொங்கும் பச்சை மிளகாய்கள், பிரமிப்பை ஏற்படுத்துகிறது என்றால் மிகையில்லை. ஒரு சதுர சென்டி மீட்டர் வலைக்குள், 36 சன்னரக துளைகள்

இருப்பதால் பூச்சி களுக்கு தடா. அடுத்தடுத்து இரண்டு கதவுகளும் இதேவலையில் தயாரிக்கப்பட்டுள்ளதால், வெளியில் இருந்து பூச்சிகள் உள்ளே நுழைவதற்கு வாய்ப்பில்லாத நிலையில் செடிகள் சிலுசிலுவென பசுமை படர்ந்து பரவசப் படுத்துகின்றன.

இந்திய இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் 36 க்கு 30 மீட்டர் அளவில் 4 லட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள இந்த குடிலில் 1,050 புல்லட் ரக மிளகாய் நாற்றுகள் நடப்பட்டன.

பயிருக்கு தெளிக்க வேண்டிய பூச்சிமருந்துகளை தவிர்க்கலாம் என்கிறார், தோட்டக்கலை உதவி இயக்குனர் சீனிவாசன். அவர் கூறியது: தரைப்பகுதியில் பயிர்கள் வளர்க்க வேண்டியபகுதியில், முதலில் சொட்டுநீர் பாசனம் அமைக்கப் படுகிறது.

அதன் மேல் பிளாஸ்டிக் நிலப்போர்வை, பாய் போல நீண்ட வரிசையில் விரிக்கப்பட்டு, நாற்று நட வேண்டிய இடம் மட்டும் துளையிடப் படுகிறது. நாற்று வரிசைக்கு இடைப்பட்ட பகுதியில் கருப்பு நிற களையை நீக்கும் பாய் விரிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் நிலப் போர்வையால் தண்ணீர் ஆவியாவது தடுக்கப்படுகிறது. சொட்டு நீர் வழக்கத்தை விட குறைந்தளவே தரப்படுகிறது. சீதோஷ்ணத்தை கட்டுப்படுத்தும் வகையில் 'பாகர்ஸ்' எனப்படும் நுண்நீர் தெளிப்பான் மூலம் பனிப்புகை போன்ற சிறு துகள்களாக தண்ணீர் தெளிக்கப்படுவதால், 4 டிகிரி வெப்ப நிலை வரை குறைக்கப்படுகிறது. ஒரு துளையின் வழியாக ஏழரை லிட்டர் தண்ணீர் மட்டுமே வரும். எட்டு மாதங்களை கடந்த நிலையில், இன்னும் மிளகாய்ச் செடிகள் பலன்தந்து கொண்டிருக்கின்றன.

வழக்கமாக திறந்தவெளியில் நடப்படும், இதே ரக மிளகாய்ச் செடிகள், இரண்டடி உயரத்தில் செடி ஒன்றுக்கு ஒன்றே கால் கிலோ மிளகாய் வீதம் எட்டுமாதங்கள் வரை கிடைக்கிறது. ஆனால் நிழல்வலை குடிலில் இந்த மிளகாய்ச் செடிகள் அதிகபட்சமாக, எட்டடி உயரம் வரை வளர்வதோடு நிறைய சிம்புகள்விட்டு அதிகபட்சமாக மூன்றரை கிலோ வரை காய்க்கின்றன. 11 மாதங்கள் வரை தொடர்ந்து பலன்தருகின்றன, என்றார். இத்தொழில்நுட்பம் குறித்து விவசாயிகள் சீனிவாசனை 94434 55477ல் தொடர்பு கொள்ளலாம்.

**-எம்.எம்.ஜெயலெட்சுமி**

**மதுரை**

## டானாதோட்டம் முருங்கை கீரைக்கு மவுசு



முருங்கை சாகுபடி மாநிலத்தில் பல இடங்களில் வளமாக இருந்தாலும், குறிப்பிட்ட இடங்களில் சாகுபடியாகும் முருங்கைக்கும், கீரைக்கும் அதிக வரவேற்பு உள்ளது.

தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இதன் விளைச்சல் அதிகம். தேனி மாவட்டத்தில் கடமலைகுண்டு, மயிலாடும்பாறை ஒன்றியப் பகுதிகளில் பலவிவசாயிகள் இதனை முழுநேரத் தொழிலாக கொண்டுள்ளனர். ராஜேந்திரநகர், கண்டமனூர், டானாதோட்டம் பகுதியில் உள்ள முருங்கை கீரை வியாபாரிகளால் அதிகம் விரும்பப்படுகிறது.

இந்த பகுதியில் இருந்து தினமும் 20 டன் வரை காய வைக்கப்பட்டு, பக்குவப்படுத்தப்பட்ட முருங்கை கீரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதிலும் டானாதோட்டம் முருங்கை கீரைக்கு தான் சந்தை மதிப்பு சற்று அதிகம். முருங்கையின் காய்ப்பு காலம் இல்லாத காலங்களில் இதன் கீரை விவசாயிகளுக்கு வாழ்வு தருகிறது. இதன் கீரை 50 ரூபாய் முதல் 90 ரூபாய் வரை சீசனுக்கு தகுந்தவாறு விற்பனையாகிறது.

இந்த கீரையில் புரோட்டீன், கால்சியம், பொட்டாசியம், இரும்பு மற்றும் வைட்டமின் சி' சத்துகள் உள்ளது. செயற்கை உரம், பூச்சி மருந்து பயன்படுத்தப்படாத நாட்டு ரக முருங்கை மரத்தின் கீரைக்கு மருத்துவ உலகிலும் அதிக வரவேற்பு உள்ளது.

மரத்தில் இருந்து எடுக்கப்பட்ட கீரையை காயவைத்து அதில் கழிவுகள், கொப்புகள் அகற்றி சுத்தம் செய்யப்பட்ட பின் அவற்றை மதுரை, திண்டுக்கல் பகுதி வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இவை அரைக்கப்பட்டு

பவுடராக மருந்துக் காக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. டானாவூரில் முருங்கை கீரை சாகுபடி மற்றும் கொள்முதல் செய்யும் சுப்புராஜ் கூறுகையில், இயற்கை உரம் பயன்படுத்தினாலும் மண்ணின் தன்மைக்கு ஏற்ப டானாதோட்டம் பகுதியில் உள்ள முருங்கை கீரையின் சுவையும், தன்மையும் மற்ற இடங்களில் இல்லை. அதனால் இந்த பகுதியில் உள்ள கீரைக்கு முக்கியத்துவம் உண்டு. கீரையை பக்குவப் படுத்தி எடுப்பது சற்று சிரமமானது. இந்த பகுதியில் மட்டும் தினமும் 4 டன் வரை கீரை கிடைக்கிறது. தற்போது ஒரு கிலோ 50 ரூபாய் வரை விற்பனையாகிறது. மழை காலம் துவங்கினால் இதன் விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. கடந்த 4 ஆண்டுகளாக கீரை சாகுபடி பல விவசாயிகளுக்கு நல்ல வாழ்வாதாரமாக உள்ளது," என்கிறார். தொடர்புக்கு 76397 92103

**- டபிள்யு.எட்வின்**

**துரை.**